மே.மு.ந.க. எண்.வ6/2446/2021

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
(வளர்ச்சி பிரிவு)
தூத்துக்குடி.

நாள்: 16.03.2023

அரசாணை எண் (4ப) எண்.01 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ.5) துறை நாள் 02.01.2023 நாள் 02.01.2023, அனுப்பப்படுகிறது.

M. Bose 20.3.23

மாவட்ட ஆட்சியருக்காக,
தூத்துக்குடி.

20.03.23

**பெறுநர்**

செல்வி.சு.உமா ஈஸ்வரி,
ஊர்நல அலுவலர் நிலை-2,
திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்.
(அலுவலகத்தலைவர் மூலமாக)

**நகல்**

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திருவைகுண்டம்.

அ1/3442/2021 நாள்: 03.2023

சார்பு செய்யப்படுகிறது.

29/3/23

வட்டார வளர்ச்சி அலுவலா (கி.ஊ.)
திருவைகுண்டம்

29.3.23

பெறுநர்

செல்வி. சு.உமா ஈஸ்வரி

ஊர்நல அலுவலர் நிலை-2

திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்.

## சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - தூத்துக்குடி மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.இ.கடலைக்கண் அலுவலக உதவியாளர் என்பவரின் மகள் செல்விக.உமா ஈஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை 2 பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ 5) துறை

**அரசாணை (4ப) எண்.01** நாள் 02.01.2023.

சுபகிருது, மார்கழி 18.

திருவள்ளுவர் ஆண்டு 2053.

**படிக்கப்பட்டவை**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண்.வ6/2446/20211, நாள்: 03.09.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.70478/2021/டி3, நாள்: 02.06.2022.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 12.12.2019 அன்று பணியிடைக்காலமான திரு.இ.கடலைக்கண் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்விக.உமா ஈஸ்வரி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை 2ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.09.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால் அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகள் செல்வி.சு.உமா ஈஸ்வரி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 10.12.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.12.2002 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை-2 ஆகப் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி.சு.உமா ஈஸ்வரி என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை-2ஆக பணியில் சேர்ந்த நாளான 06.09.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 07.12.2022 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்./18054/ட்டி1/2022-1 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.3687622/ஜி1/2022-1 நாள்:13.12.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்.
செல்வி.சு.உமா ஈஸ்வரி,
இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2,
தூத்துக்குடி மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம்)

மாநிலக் கணக்காயர், சென்னை - 18/35.

கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15

மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், தூத்துக்குடி மாவட்டம்.

**நகல்**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**